# போபால் வழக்கில் அரசு தலையீடு

## முன்னாள் சிபிஐ அதிகாரி குற்றச்சாட்டு

**புது தில்லி, ஜூன் 8:** போபால் விஷ வாயு கசிவு வழக்கில் மத்திய அரசு அதிகாரிகள் தலையிட்டதால்தான் நீதி கிடைக்க தாமதமாகிறது என மத்திய புலனாய்வுத் துறை (சிபிஐ) முன்னாள் இணை இயக்குநர் பி.ஆர்.லால் குற்றம்சாட்டினார்.

இது குறித்து பி.ஆர்.லால் கூறியதாவது:

யூனியன் கார்பைடு நிறுவனத்தின் தலைமை நிர்வாகியாக இருந்த வாரன் ஆண்டர்சனை இந்தியாவுக்கு கொண்டு வருவதில் ஆர்வம் காட்ட வேண்டாம் என வெளியுறவுத் துறை அதிகாரிகள் சிலர் என்னை வற்புறுத்தினர்.

சிபிஐ விசாரணையில் சில அதிகாரிகள் தலையிட்டதால்தான் நீதி கிடைக்க தாமதம் ஆகிறது.

மனிதர்களை படுகொலை செய்ததற்காக இந்திய குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 304-ன் கீழ்தான் சிபிஐ குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தது. அதன்படி அதிகபட்சம் 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும்.

ஆனால், அதன் பின்னர் 304 'ஏ' பிரிவுக்கு வழக்கு மாற்றப்பட்டது. இந்தப் பிரிவு சாதாரணமாக சாலை விபத்துகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

எந்த ஆதாரத்தில், எந்த சூழ்நிலையில் இது போன்று வழக்கை சிபிஐ நீர்க்கச் செய்தது என்பது தெரியவில்லை.

மற்ற நாடுகளில் எல்லாம் நீதித் துறை, அதிகார வர்க்கம், அரசியல் தலைவர்களின் குறுக்கீடு இல்லாமல் மத்திய புலனாய்வு ஏஜென்சிகள் சுதந்திரமாக இயங்கி வருகின்றன என்றார்.

1994 ஏப்ரல் முதல் 1995 ஜூலை வரை இந்த வழக்கை பி.ஆர்.லால் கவனித்துவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**மொய்லி கண்டனம்:** லால் பேட்டி குறித்து மத்திய சட்ட அமைச்சர் வீரப்ப மொய்லி கூறியதாவது:

ஓய்வு பெற்ற பின் பலர் பலவித அறிக்கைகளை வெளியிடுகிறார்கள். லால் அறிக்கை பொறுப்பற்றதாகும்.

அவர் கூறுவது போன்று நடக்கவேயில்லை. இதுபோன்று அறிக்கை விடுவதன் மூலம் பிரபலமாக சிலர் முயற்சிக்கின்றனர் என்றார் மொய்லி.